**01.04.2026**

அ.வ.எண்.**12/2023**

<u>பி.சா.1 ஆரீப் குறுக்கு விசாரணை</u>

1. தாவாசொத்துகள் அனைத்தும் எனது பாட்டி மரியம் பீ அவர்களின் சொத்து என்றால் சரிதான். எனது பாட்டி மரியம் பீ எனது தந்தை, வாதி ஜலால் மற்றும் ஹிலால் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி எனது தந்தைக்கு 22 அடி அகலம் பாகம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதேபோல் வாதிக்கு 20 அடி அகலம் பாகம் கொடுக்கபட்டது என்றால் சரிதான். 6 அடி அகலம் பொது வழிக்கு விடப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன 6 அடி அகலத்திற்கு 160 அடி நீளம் என்றால் சரிதான். அதுதான் இந்த வழக்கில் டி அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வாதி, எனது தந்தை, 1ம் பிரதிவாதி, பொது வழி என்று ஒதுக்கபட்ட சொத்திற்கு வடக்கு பக்கம் ஹிலால் என்பவருக்கு பாகம் கொடுக்கபட்டது. பொது வழியான 160 அடி நீளம் உள்ள பாதையை 6 அடி அகலத்தில் மேல்பக்கம் 6 அடி அகலம் உள்ளது, ஆனால் கீழ்பக்கம் 6 அடி அகலத்தில் 3 1/2 அடி நிலத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துவிட்டோம் என்றால் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை, காலி நிலமாகதான் உள்ளது. மேற்சொன்ன 6 அடி அகலத்தில்தான் 3 1/2 அடி நிலத்தில் படிகட்டுகள் இருக்கிறதா என்றால் 1998 ஆண்டில் எனது பாட்டி ஏற்கனவே

படிகட்டுகள் கட்டியிருந்தார். நாங்கள் கட்டவில்லை.

3. வடக்கு பக்கம் கிழக்கு மேற்காக 19.6 அடி அகலம், தெற்கு பக்கம் கிழக்கு மேற்காக 22 அடி அகலம், மேலும் 160 அடி நீளம் உள்ள சொத்தில் 6 அடி அகலம் பொது வழியில் படிகட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டு வா.சா.ஆ.1ல் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி கீழ்தளம் மட்டும் தான் எனது தந்தைக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். 2017ம் வருடம் நாங்கள் 2 மாடி வீடு கட்டிவிட்டோம் என்றால் முதல் தளம் மட்டும் கட்டியுள்ளோம். மேற்சொன்ன முதல் தளத்திற்கு செல்வதற்கு 3 1/2 அடி கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்து கட்டிவிட்டோம் என்றால் அது சன்ஷேட் ( சூரிய மறைப்பு) ஆக கட்டுபட்ட இடம், அது எனது பாட்டி இருக்கும் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

4. மேற்சொன்ன 3 1/2 அடி கட்டிடம் பொது வழியில் உள்ளது என்றால் சரிதான், அதன்படி கட்டிட அனுமதி இருந்தது. முதல் மாடி படிகட்டுகள் தெற்கிலிருந்து வடக்கு முகமாக உள்ளது என்றால் சரிதான், அது கட்டிட அனுமதியின்படி அமைக்கப்பட்டது. மேற்சொன்ன பொது வழியில் நான் இரு சக்கர வாகனத்தை நிறுத்துகிறேனா என்றால் நான் மற்றும் வாதியும் நிறுத்துகிறார். தாவா பி அட்டவணை சொத்தை பொது வழி என்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். பொது வழியில் படிகட்டுகள், முதல் தளம் மற்றும் இரண்டாவது தளத்தில் 3 1/2 அடி அகலம் நீட்டிப்பு செய்து அதன் மேல் படிகட்டுகள் கட்டபட்டுள்ளது என்றால் தரைதளத்தில்தான் 3 1/2 சன்ஷேட் உள்ளது, அதற்கு மேல்தான்

படிகட்டுகள் ஏற்கனவே கட்டபட்டு இருந்தது. 6 அடி அகல பொது பாதையில்தான் 3 1/2 அடி ஆக்கிரமிப்பு செய்து கீழ்வீட்டிற்கு படி மற்றும் மேலே செல்வதற்கு படிகட்டுகள் கட்டியுள்ளது என்றால் ஏற்கனவே 1998ம் ஆண்டிலிருந்து அப்படிதான் கட்டுபட்டு இருந்தது, அதை தான் நாங்கள் பயன்படுத்தி வருகிறோம்.

5. பி.சா.ஆ.2 கட்டிட அனுமதி வரைபடத்தில் படிகட்டுகள் அமைப்பு இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 மற்றும் 5 கட்டிட அனுமதிக்கான உத்தரவு மற்றும் வரைபடம் 2017ம் ஆண்டு பெற்றுதான் எனது அப்பா முதல் தளம் கட்டினார் என்றால் சரிதான். பி.சா.ஆ.5ல் முதல் தளத்தில் படிகட்டுகள் கட்டும் அமைப்பு உள்ளது, ஆனால் பி.சா.ஆ.2ல் அப்படி இல்லை என்றால் சரியல்ல, இரண்டு ஆவணத்திலும் படிகட்டுகள் உள்ளது. பி.சா.ஆ.2ல் எங்களுடைய இடத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி படிகட்டுகள் உள்ளதாக இருக்கிறது, ஆனால் பி.சா.ஆ.5ல் பொது வழியில் படிகட்டுகள் கட்டும் அமைப்பு உள்ளது என்றால் சரியல்ல, பி.சா.ஆ.2ல் வரைபடத்தில் உள்ள அமைப்பின்படி படிகட்டுகள் உள்ளது.

6. பி.சா.ஆ.2 ன்படி கீழ்தளத்தில் எங்கள் இடத்தில் படி ஆரம்பித்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி மேலே பொது இடத்தில் செல்கிறது, ஆனால் பி.சா.ஆ.5ன்படி படிகட்டு ஆரம்பிக்கும் இடம் பொது வழியில் உள்ளது என்றால் ஆரம்பத்தில் ரோடு பள்ளமாக இருந்தது, அதை நிரப்பும் போது 3 படிகட்டுகள் மறைந்துவிட்டது, பின்பு ரோடு உயர்ந்த பிறகு மீதம் உள்ள இடத்தில் படிகட்டுகள் அமைந்துள்ளது. எனது வீட்டின் முன்புறம்

படிகட்டுகள் இல்லை என்றால் சரிதான். பொது வழியிலிருந்து படி தொடங்குகிறது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ன்படி பொது வழியில் படிகட்டுகள் கிடையாது, மேலும் முதல் தளத்திற்கு செல்வதற்கு படி அமைப்பு நீடித்து காட்டவில்லை, ஆனால் பி.சா.ஆ.5 ன்படி பொது வழியில்தான் படி ஆரம்பித்து முதல் தளத்திற்கு செல்கிறது என்றால் சரியல்ல.

**7**. பி.சா.ஆ.5 ல் முதல்தளத்தில் பொது வழியில் படி அமைப்பு வரைபடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனவே மூன்று நபருக்கு பாத்தியபட்ட பொது வழி சொத்தை ஆக்கிரமித்து படிகட்டுகள் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. எனவே ஈ அட்டவணை சொத்தில் எந்த வகை கட்டிடம் கட்டியிருந்தாலும் நாங்கள் வாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எனவே வழக்கு வாதிக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.